

வாள் 2 | திருவள்ளுவர் ஆண்டு 1979 புரட்டாசி 3
18—9—48 சனிக்கிழமை | வீச்சு 5

ஆசிரியர்கள்:
ஏ. எம். சுப்பிரமணியன்

வெற்றி வீரர்
காயிதே அஃஸம் ஜின்னா

இந்த இதழ் விலை 1½ அணுதான். பல்வேறு வசதிக் குறைவுகளால் இந்த இதழை பெரியார் இதழாகக் கொண்டுவர இயலவில்லை. இதுபற்றிய அறிவிப்பு, பிறகு!

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

வியாழக்கிழமையன்றே, ஐதராபாத்தின் இரண்டாவது முக்கிய நகரமாகிய அவுரங்கபாத் இந்தியத் துருப்புகளிடம் சரண் அடைந்துவிட்டது. அவுரங்கபாத் மிக முக்கியமானதோர் சூழ் நிலையில் அமைந்துள்ள இடம். இதன் வீழ்ச்சி ஐதராபாத்தின் வடமேற்கு ஜில்லாக்கள் அனைத்தும் இந்தியத் துருப்புகளிடம் சிக்கிவிட்டன என்பதற்கான சிறந்த அறிகுறியேயாகும். இனி அடுத்த இலக்கு 'சிகந்தராபாத்'தான்.

'சிகந்தராபாத்'தையும் இந்தியத் துருப்புகள் கைப்பற்றிவிட்டால் ஐதராபாத் போராட்டத்தின் முக்கியமான கட்டம் முடிந்துவிட்டது போலத்தான். ஐதராபாத்துக்கே இருதயம்போல இருப்பதும் நெடுஞ் சாலைகள், இருப்பு வண்டிப் பாதைகள், வானூர்தி நிலையங்கள் முதலிய போக்கு வரவுத் துறைகள் ஒன்று கூடும் இடமாக இருப்பதும் இந்த நகரம்தான். இந்த நகரம் வீழ்ந்தால் ஐதராபாத்தே வீழ்ந்தது போலத்தான். எனவே இந்த நகரத்திற்கு அருகே இந்தியத் துருப்புகள் வர வர ஐதராபாத் துருப்புகள் மிக முனைப்பாகப் போராடக்கூடும் என்பதையும் அந்தப் போர் மிகக் கடுமையானதாகவும் பலமானதாகவும் இருக்கும் என்பதையும், அங்கே சில பல நாட்கள் போராட்டம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

'சிகந்தராபாத்'தைக் கைப்பற்றுவதிலேயே இந்தியத் துருப்புகளின் எண்ணம் உருத்து நிற்பதால், பீரார்—மத்திய மாகாணப் பகுதிகளிலிருந்து உள் நுழைந்த படைகள் அவ்வளவாக முன்னேற முடியவில்லை. சிகந்தராபாத் விழுந்ததும் இந்தியத் துருப்புகளின் கண்ணோட்டம் அந்தப் பகுதிகளிலேயே இருக்கக்கூடும்.

ஐதராபாத் சர்க்கார் இதுவரை எந்தப் பகுதியிலும் பலமான போராட்டம் நடத்தியதாகத் தெரியவில்லை. நிஜாம் மன்னரின் போக்கு என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை. ஒருக்கால் இந்தியத் துருப்புகள் மேலும் மேலும் உள்ளீடான பகுதிகளுக்குள் வந்த பிறகு அவற்றைத் திடீரென சுற்றி வளைத்து அடித்து வீழ்த்தலாம் என்று கனவு காண்கிறாரா அல்லது இந்தியாவுடன் போராட நம்மால் ஆகாது என்றெண்ணி அயர்ந்து விட்டாரா என்பதும் தெரியவில்லை. ஏற்கெனவே ஏராளமான பணத்தை மேல் நாட்டுப் 'பாங்கி'களில் நிஜாம் தனக்காக என்று சேமித்து வைத்திருப்பதாகவும்; எந்த விநாடியிலும் அவர் தன் அரசை விட்டு விட்டு 'பறந்து'விடக்கூடும் என்றும் "உண்மை உணர்ந்த வட்டாரங்கள்" சில கூறுகின்றன.

போர், இதே போக்கில் போகுமானால் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் ஐதராபாத் சரணடைந்துவிடும் என்றும், "போர்" முடிந்துவிடும் என்றும் பொதுவாக எதிர்பார்க்கப் படுகிறது.

திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை நிலைமை மிகத் தெளிவாக இருக்கிறது. ஐதராபாத்தில் ரசாக்கர்கள் செய்துவரும் அட்டூழியங்களை அழுத்தந் திருத்தமாகக் கண்டித்தும், உடனடியாக "மன்னர் ஆட்சி"க்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு பாமர மக்களிடம் ஐதராபாத் ஆட்சி மாற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் திராவிடர் கழகம் முன்னரே தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. பாமர மக்கள் பாராளும் காலம் இது. மக்கள் ஆட்சி எங்கெங்கும் மலர்ந்துவிட்ட 'சகாப்தம்' இது. ஜனநாயகம் எமது பிறப்புரிமை என்று ஒவ்வொரு நாட்டு மக்களும் முரசொலி முழங்கும் நாள் இது. இந்நாளில் நிஜாம் மன்னரைப் போன்ற "பொம்மை ராஜாக்கள்" அங்கங்கே இருந்துகொண்டு தங்கள் "லீலாவினோத காட்டு தர்பார்" நடத்துவதை நாம் நிச்சயம் சகித்துக் கொண்டிருக்க முடியாது. எனவே நிஜாம் முன்னரே முடி துறந்திருக்க வேண்டும் என்பதையும், மக்கள் தங்களுக்கு விருப்பமான ஆட்சிமுறையைத் தாங்களே வகுத்துக் கொள்ள வழிவிட வேண்டும் என்பதையும் பொறுப்பாட்சி கொடுக்காமல் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் நிஜாமுக்குப் பேராபத்து—ஏனெனில் மக்கள் உள்ளம் ஒரு குமுறும் எரிமலை—அது எந்தவிநாடியிலும் வெடித்துவிடக்கூடும் என்பதையும் திராவிடர் கழகம் நீண்ட நாட்களாகவே சொல்லி வருகிறது.

ஐதராபாத்தும் சரி, வேறு எந்த சமஸ்தானங்களும் சரி, அவை இந்திய யூனியனில் சேருவதா இல்லையா என்பதைப் பற்றியும் திராவிடர் கழகம் கூறி வந்ததெல்லாம் அது அந்த சமஸ்தானத்து மக்கள் விருப்பம்; அவர்களிடம் 'ஓட்' எடுத்து அதை நிர்ணயிப்பதே முறை என்பதுதான். திருவாங்கூர் பிரச்சினையின் போதும் புதுக்கோட்டை இணைப்புப் பிரச்சினையின் போதும் இப்போது ஐதராபாத் இணைப்புப் பிரச்சினையிலும் நாம் கூறிவந்ததும்—வருவதும் "மக்கள் கருத்து எது—அதை நிறைவேற்றுவதுதான் ஜனநாயகம்" என்பதுதான்.

இப்போது, ஐதராபாத் பிரச்சினையில், இந்திய சர்க்காரின் கருத்தும் இதுதான் என்று நாம் கருதுகிறோம். "ஐதராபாத்தில் அமைதி நிலைநாட்டப்பட்டு ஒழுங்கான வாழ்க்கையை எத்தகைய பயமுமின்றி நடத்த மக்களுக்கு முழு வசதியும் ஏற்பட்டு, மக்கள் விருப்பப்படி, சட்டத்திற்குட்பட்டு, நடக்கும் ஐதராபாத் சர்க்கார் ஒன்றும் ஏற்பட்டுவிட்டால், அதன்பிறகு ஒரு விநாடியும் நாம் இங்கு இருக்கமாட்டோம்" என்றும், "போர் முடிந்து அமைதியான சூழ்நிலை ஏற்பட்டதும், தங்கள் உள்நாட்டு நிர்வாகத்திற்கான ஆட்சிமுறை எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றியும், ஐதராபாத்—இந்திய யூனியன் உறவு எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றியும் தங்களுக்குத் தாங்களே முடிவு செய்ய ஐதராபாத் மக்களுக்கு ...டாயம் வாய்ப்பு தரப்படும்" என்றும் ஐதராபாத் முனை இந்தியத் தளபதி "ஐதராபாத் போர் அறிக்கை"யில் குறிப்பிட்டிருப்பது நம் கருத்தை அரண் செய்வதாகவே அமைந்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

வாய்ந்த போர்க்குறி போல் மதக்குறி இனிதா?

அற்புத சக்தியின் உருவம் மறைந்தது!

மலை குலையினும் மனம் குலையாத மாவீரர் இறந்தார்!

ஜின்னா முடிவு: பெரியார் அறிக்கை

அய்யோ! ஆஜம் ஜின்னா முடிவெய்தி விட்டார்.

அஞ்சா நெஞ்சம், ஆண்மை இயல்பு, இரும்பு ஏன், எஃகு உள்ளம், தயவுக்கு, தாக்ஷண்யத்துக்கு என்று தனது முடிவை, கருத்தை சிறிதும் விட்டுக் கொடுக்காத ஜாக்கிரதைத் தன்மை ஆகியவைகளுக்கு ஒரு உருவாய் விளங்கினவர் ஜின்னா சாயபேயாகும்.

மலை குலுங்கினாலும் ஜின்னாவின் மனம் குலுங்காது, என்று சொல்லலாம். அவரது வீர மொழிகள் ஒவ்வொன்றும் மலையை நடுங்கச்செய்யும் என்றால் மனித உள்ளத்தைப் பற்றி சொல்லவேண்டுமா?

ஜின்னா இந்தியாவில் ஒரு மனிதரையாவது தனக்கு மேம்பட்டவர் என்று மதித்ததாக நான் அறிந்ததில்லை. யாருக்கும் பொய் (தாட்சண்ய) மரியாதை கொடுத்ததாகவும், நான் கேட்டதில்லை. உள்ளதை உள்ளபடி உகிர்த்துக காட்டுவதில் சிறிதும் மறைக்காதவர். எதிர்ப்புக்கு அஞ்சாதவர் என்பது மாத்திரமல்லாமல் எதிர்க்க, எதிர்க்க எதிரியின் பலத்தைத் தனக்கு ஆக்கிக்கொள்ளும் அற்புதக் கலை (வித்தை) கொண்டவர்.

இப்படிப்பட்ட ஜின்னா முடிவெய்தினதானது இந்தியாவின் ஒரு அதிசய மனிதர், அற்புத மனிதர், இணை சொல்ல முடியாத மனிதர், பதில் காணமுடியாத மனிதர், மறைந்தார் என்று சொல்லும்படி ஆகிவிட்டது.

ஜின்னா சாயபை இந்துக்கள் ஒரு முஸ்லீம் என்று கருதி ஏமாந்தார்கள். ஜின்னா சாயபு உண்மையில் ஒரு ஏழை பங்காளனாவார்.

ஜின்னா சாயபு வேஷத் தியாகி அல்ல. வாய்ப்பந்தல் தியாகி அல்ல. பித்தலாட்டத் தியாகி அல்ல. உண்மைத் தியாகி ஆவார்.

உண்மையிலேயே தனக்குநல்ல திறமையும் வருவாயும் இருக்க அதைத் தியாகம் செய்தவர்.

அவர் யாருக்காக என்று தனது வாழ்நாளை ஒப்புவித்தாரோ அவர்கள் அத்தனை பேரும் அவரிடத்தில் உண்மை நம்பிக்கை, உண்மை பற்றுதல் வைத்து உண்மையாகப் பின்பற்றி வந்தவர்களாவார்கள்.

ஜின்னாவை உண்மைத் தலைவராகக்கொண்டவர்களில் ஒருவரிடத்திலாவது பொது நலம் என்பதல்லாமல் ஒரு சிறு சுய நலம் கருதும் எண்ணம் இருந்ததில்லை என்று சொல்லும்படியான உண்மையான பின்பற்றுபவர்களைக் கொண்டவர். ஒன்பது கோடி முஸ்லிம்கள் உள்ளத்திலும் ஒரு தன்மையாகவே வீற்றிருந்தவர்.

ஒவ்வொரு முஸ்லிமும் ஜின்னா ஒரு முஸ்லிமாய்ப் பிறந்திருப்பதற்காக மகிழ்ச்சியும், பெருமையும், அகம்பாவமும் அடையும்படியான தன்மை கொண்டவர்.

எப்படிப்பட்ட எதிர்ப்புக்கும் அஞ்சியோ கலங்கியோ தனது லட்சியத்தை சிறிதும் குலைத்துக்கொள்ளாமல் எதிர்ப்பைக் காணக்காண தனது லட்சியத்தைப் பெருக்கிக் கொண்டே போன உறுதியாளர்.

அவர் ஒரு தனி அமைப்புப் பிறவியே ஆவார்.

அவர் மறைவு உலகில் ஒரு அற்புத சக்தியின் உருவம் மறைவு.

இனி இந்துஸ்தான் பாகிஸ்தான் முதலியவைகளிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் ஜின்னா சாயபின் உறுதியையும், தியாகத்தையும் பொதுநல ஆர்வத்தையும் தங்கள் உள்ளத்தின் ஒரு பாகத்தில் உறுதியாக வைத்துக்கொண்டு இருக்கவேண்டியது அவசியமாகும். முஸ்லிம் அல்லாத மற்ற லக்ஷியவாதிகள், அனுபவ கர்ம வீரர்கள் ஒவ்வொருவரும் ஜின்னாவின் ஒவ்வொரு தன்மைகளையும் தங்களது வழிகாட்டியாகக்கொள்வார்களாக. பிறந்தவர்கள் செத்தே ஆகவேண்டும்—இது இயற்கை. ஆதலால் ஜின்னா சாயபு இயற்கையை எய்தினார்.—நாமும் இயற்கையை எய்துபவர்களே—ஆதலால் துயரப்படுவதற்கு அர்த்தமும் இல்லை.—பயனும் இல்லை—வாழ்க ஜின்னா இயம்.

மனம் மொழி மெய் ஒன்றி மகிழுதல் இனிதா?

நமது போர் நிறுத்தம்

“ஐதராபாத் மீது இந்திய சர்க்கார் படையெடுக்க நேர்ந்தால் நமது அறப்போர் அதுபோது நிறுத்தி வைக்கப்படும்” என்று நம் தலைவர் **பெரியார்** அவர்கள் போராட்டத் துவக்கத்தின்போது குறிப்பிட்டதற்கிணங்க, ஐதராபாத்துக்குள் இந்தியத் துருப்புகள் நுழைந்தன என்ற சேதி கிடைத்த அதே நாளில்—ஏன்—அதே மணியில் நமது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்—அல்ல—அல்ல—திராவிட கலாசாரப் பாதுகாப்புப் போராட்டத்தின் தீவிர நடவடிக்கைகள் மட்டும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய சர்க்கார் ஐதராபாத் மீது போர் தொடுத்துவிட்டதால் ஒருவித நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இயல்பாகவே யாருடைய கவனமும் ஐதராபாத் பக்கம் திரும்பவேண்டிய கட்டாயமும், யாரைப் பார்த்தாலும் ஐதராபாத் போர் பற்றியே பேசிக்கொண்டிருக்க வேண்டிய தேவையும், எங்கு சென்றாலும் இன்று அவுரங்கபாத் பிடிபட்டது—இன்று ஜல்னா வீழ்ச்சியுற்றது—இன்னும் சிகந்தராபாத் 84 மைல்தான்—நளதுர்க்க பகுதியில் எதிரிக்குச் சேதமாமே—ஷோலாப்பூர் வழியில் நல்ல முன்னேற்றமாமே—பாலஹர்ஷா பிடிபட்டதாம்—நிஜாம் ஓடுவாரா—கள்ளக் காட்டன் மறுபடியும் வந்துவிட்டானாம் என்பன போன்ற பேச்சுகளை நடமாடவேண்டிய நிலைமையும் நேரிட்டிருக்கிறது. உண்மையிலேயே ஐதராபாத் போராட்டத்தால் உடனடியாகப் பாதிக்கப்படும் நாடு திராவிடநாடுதானே தவிர வடநாடல்ல. திராவிடநாட்டைத் தொட்டுக்கொண்டும் தழுவிக்கொண்டும்தான் ஐதராபாத் எல்லை இருக்கிறது. எனவே பிறர் எவரையும் பார்க்க ஐதராபாத் பிரச்னை பற்றி நமக்கே—திராவிடர்களுக்கே அதிகப் பொறுப்பும் கவலையும் ஏற்படும்படியான நிலையில் ஐதராபாத் போர் வந்துவிட்டது. ஆதலாலேதான், ஐதராபாத் போர் முடியும்வரை நமது கலாசாரப் போராட்டத்தைச் சிறிது ஒத்திப்போட நேர்ந்திருக்கிறது.

இதனால் தவறு எதுவுமில்லை. இதனால் நமது போர் பலக் குறைவு அடையுமோ என்று எவரும் கவலைப்படவும் தேவையில்லை. நமது போர் நிறுத்தத்தை ஒரு 'சாக்காக' வைத்துக்கொண்டு நம்மை அடியோடு நசுக்கிவிட இந்த ஓமந்தூர் சர்க்கார் முயன்றால்—அப்படி முயல்வதாக நமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன—அதைவிடப் பைத்தியக்காரத்தனமும் நன்றிகெட்ட செயலும் வேறு இருக்க முடியாது.

இந்த தற்காலீகப் போர் நிறுத்தத்தால் நமது இலட்சியம் எந்த விதத்திலும் கெட்டுவிடாது. இரண்டு மூன்று வாரங்களோ, மிஞ்சிப் போனால் இரண்டொரு மாதங்களோ ஐதராபாத் போராட்டம் நீடிக்கக்கூடும். அதுவரை சென்னை மறியலை நிறுத்திவைப்பதால் நமது போர் நோக்கம் தடைப்படாது. மாறாக, நமது போர், இந்தியையும் வடநாட்டு ஆதிக்கத்தையும் எதிர்ப்பதற்காகவும் தென்னாட்டுக் கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்காகவும் நடத்தப் படுகிறதே தவிர சர்க்காருக்கு வீண் தொல்லை தருவதற்காக நடத்தப்படுவதல்ல என்பதை சர்க்காருக்கு உணர்த்த நமக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. சர்க்காருக்கு வீண் எதிர்ப்பைத் தருவதே நமது நோக்கமாயிருந்தால் ஐதராபாத் பிரச்சினையில் அவர்கள் சிக்கிக் கொண்டுள்ள இச்சமயம்போல அவர்கட்குத் தொல்லைதர வேறு நற்சமயம் வாய்ப்பதரிது—அதுதான் நமது நோக்கமானால் போராட்டத்தைச் சிறிதும் விட்டுக் கொடாது மேலும் மும்முரமாக நடத்திச் செல்லலாம்—ஆனால் அது அல்ல நமது நோக்கம்—ஆகவேதான் நமது போர் தற்காலிகமாக நிற்கிறது.

“சர்க்கார் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள போதுதான் நாம் நம் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்—அப்போதுதான் சர்க்கார், இது வேறு தொல்லையா என்று எண்ணிக்கொண்டு நம் கோரிக்கைக்கு இணங்கி விடுவர்—இதுதான் சமயம் நம் கோரிக்கையை வலியுறுத்த!” என்று எண்ணிடும் போக்குடைய கட்சிகள் நாட்டிலே பல உண்டு—ஆனால் திராவிடர் கழகம் அதிலே ஒன்றல்ல. ஆகவேதான் அத்தகைய “தாடி பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்பு” கேட்கும் மனப்பான்மையை அது கொள்ளவில்லை! ஆனால் வேறு சில கட்சிகள்—குறிப்பாக காங்கிரஸ்—அத்தகைய மனப்பான்மையுடன் பல முறை நடந்துகொண்டிருக்கிறது. பிரிட்டன் சாவதா இருப்பதா என்ற உயிருக்குத் துணிந்த போராட்டத்தில் இறங்கி இருந்தபோது, ஜெர்மானியரின் வெடிகுண்டுகள் சீமைக் கட்டிடங்களை 'ருசி' பார்த்துக்கொண்டிருந்தபோது, சிங்கப்பூரைக் கைப்பற்றிக்கொண்டு பர்மாவுக்குள் ஜப்பானியக் குள்ளர் படையெடுத்துவிட்டபோது, சென்னைமீது குண்டு-விசாகையின்மீதும் குண்டு என்று அலறிப் புடைத்துக்கொண்டு மக்கள் சோக சித்திரங்களாக ஊருக்கு ஊர் மூட்டை முடிச்சுகளுடன் ஓடி ஓடித் தவித்துக் கொண்டிருந்தபோது, குழந்தைகளும் குட்டிகளும் ஆடவரும் பெண்டிரும் என்ன நேரத்தில் என்ன நேருமோ, நாம் உயிருடன் வாழ முடியுமோ, ஜப்பானியர் இங்கும் வந்து போர் தொடுப்பரோ, கிராமங்களிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐதராபாத் போர் விரைவில் முடியவேண்டும் என்றும், இந்திய சர்க்கார் உடனடியாக வெற்றி பெற்று ஐதராபாத்தை ரசாக்கர்களின் கொடுமையிலிருந்தும் நிஜாம் மன்னரின் கண்மூடிப் போக்கிலிருந்தும் மீட்க வேண்டும் என்றும், இரண்டொரு வாரங்களிலேயே அங்கு மக்கள் ஆட்சி ஏற்பட்டு இந்திய சர்க்கார்—ஐதராபாத் நல்லுறவு நிலைநாட்டப்படவேண்டும் என்றும் எல்லா திராவிட மக்களைப் போலவே நாமும் மனமார ஆசைப்படுகிறோம்.

மாணவரும் தன்னம்பிக்கை வளர்ப்பது நலமா ?

சண்டை துவங்கிவிடுமோ என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தபோது, இவ்வளவு ஆபத்துகளுக்கு இடையே மக்கள் சிக்கிச் சிதைந்து கொண்டிருந்த வேளையாகப் பார்த்து, இது பற்றிய கவலை துளியும் அற்றவர்களாய், இதுதான் சமயமென்று குழப்பக் கிளர்ச்சிக்கு வித்தூன்றியவர்கள், தண்டவாளம் பெயர்த்து தந்திக் கம்பி அறுத்து தபாலாபீஸ் கொளுத்தி ஆகஸ்டு தியாகம் புரிந்தவர்கள் இன்னமும் இருக்கிறார்கள், இருக்கிறார்கள் என்றால் சும்மாவா இருக்கிறார்கள், எம். எல். ஏக்களாக இருக்கிறார்கள்—பாராளும் அமைச்சர்களாக இருக்கிறார்கள்—கவர்னர்களாக இருக்கிறார்கள் — கவர்னர்களின் கைலாகுகளை நித்த நித்தம் பெறுபவர்களாக இருக்கிறார்கள்—சட்டசபைத் தலைவர்களாக இருக்கிறார்கள்—அத் தலைவர்கட்குப் புத்தி கூறும் "புலவர்"களாக இருககிறார்கள்—அலுவலங்களிலே இருக்கிறார்கள்—ஆட்சிப் பீடங்களிலே அசையாது இருக்கிறார்கள்!

இருக்கிறார்கள்! ஆனால் இருப்பதாலேயே அன்று அவர்கள் செய்த செயல் சரி என்று ஆகிவிடாது. "கள்ள மார்க்கட் கழுகுகள்" கூடத்தான் இருட்டுச் சந்தை வாணிபத்தின் காரணமாக ஏழடுக்கு மாளிகையிலே 'இந்திர பவனம்' அமைத்துக்கொண்டு வாழ்கிறார்கள், ஆனால் அதனாலேயே அவர்களின் இருட்டுச் சந்தை வாணிபம் சரி என்று சொல்ல இயலாதே!

அவர்கள் எப்படியோ போகட்டும்—அவர்கள் "தேசீயவாதிகள்"—ஆகவே எது செய்தாலும் சரி என்றாகிவிடும்—ஆனால் நாம் அதுபோல நெருக்கடியில் சிக்கியுள்ள சர்க்காரை மேலும் நெருக்கி வதைத்து நம் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையில்லை—அது மனிதப் பண்பல்ல—ஆகவே நாம் போராட்டத்தை நிறுத்திபிருப்பதே முறை.

"நெருக்கடி—ஆகவே இந்தி எதிர்ப்பு மறியலை நிறுத்தி வைத்துள்ளோம்" என்கிறீரே, அந்த நெருக்கடி சர்க்காருக்கில்லையா, சர்க்காருக்குத்தானே அதிகம் இருக்கிறது, "நெருக்கடி—ஆகவே இந்த சமயத்தில் இந்திச் சனியனை வேறு வைத்துக்கொண்டு அவதிப்பட யாம் விரும்பவில்லை—எனவே தற்காலிகமாக ஒழித்துவிட்டோம் இந்தியை" என்று ஏன் சொல்லக்கூடாது சர்க்கார் என்று இத் தலையங்கத்தைப் படிக்கும் நண்பர்கள் கேட்பது நம் செவிகட்கு எட்டாமல் இல்லை. ஆமாம் நண்பர்களே, இந்த நெருக்கடியில் இந்தி ஏதுக்கு என்று சர்க்கார் சொல்லலாம், சொல்லத்தான் வேண்டும், சொல்வதே முறை, சொல்லாதது கண்ணியக் குறைவுகூட, ஆனால் அவர்கள் சொல்லவில்லை என்பதற்காக நாம் நம் போராட்டத்தை நிறுத்தாமலிருப்பது முறை அல்ல.

"நெருக்கடியான வேளையில் இந்திச் சந்தடி ஏதுக்கு?" என்று சொல்லாதது மட்டுமல்ல, நாம் நம் போராட்டத்தை நிறுத்தியுள்ள இந்த நேரமாகப் பார்த்து, சர்க்கார், அடக்குமுறையின் வேகத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. இதுவரை மறியல் தொண்டர்கட்கு ஒரு வாரம் வெறுங் காவல் தந்துவந்த சர்க்கார் இதுபோது மூன்று வார கடுங்காவல் தர ஆரம்பித்துவிட்டது.—அந்த அளவுக்குக் கண்ணியமே உருவானதாயிருக்கிறது காங்கிரஸ் சர்க்கார்!

அவர்கள் கிடக்கட்டும் ஒருபுறம்—அவர்கள் எதிலே தான் கண்ணியமாய் இருந்தார்கள் இதிலே கண்ணியமாய் இருக்க—ஆனால் அவர்கள் கண்ணியமின்றி நடந்துகொள்வதற்காக நாமும் அப்படி நடந்துகொள்ளக்கூடாது—நாமென்ன ஆளவந்தார்களா அப்படி நடந்துகொள்ள—நமது போர் நிறுத்தம் கண்ணியமானது, நியாயமானது, தேவையானது. ஐதராபாத் போர் விரைவில் முடிந்துவிடும் என்றே தோன்றுகிறது—ஐதராபாத் போரில் இந்திய சர்க்கார் வெற்றி பெற நாமும் நம்மாலான உதவிகளையெல்லாம் செய்ய வேண்டியது நம் கடமை—அந்தப் போர் முடிந்ததும் நமது கலாசாரப் போர் முன்னிலும் பன்மடங்கு வேகத்தோடு தொடங்கப்படும்—தமிழர்களே கொஞ்சம் பொறுங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

வாழிய செந்தமிழ்!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தனைக் கொடுமைகளா உண்டாகின்றன?' என்று யாரும் துணுக்குற்று அஞ்சும்படியான நிலைமை உண்டாய்விட்டமையால், இன்னும் இவைபோல நம் நாட்டில் உலவிக்கொண்டிருக்கும் '**இந்தி**' முதலான அயல் மொழிகள் வகையிலும், இனி எதிர் காலங்களில் எவையேனும் வேறு அயல்மொழிகள் வரின் அவற்றின் வகையிலும் தமிழ் மக்கள் எவ்வளவு விழிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படும். அயல் மொழிகள் எவையேயாயினும், அவற்றின் சொற்களைக் கலக்காமலிருப்பது என்னும் **ஒரு பெரிய ஆண்மையைத்** தமிழ் மக்கள் உறுதியாய்க் கடைப்பிடித்து, அவ் வகையிற் கண்ணுங் கருத்துமாய் ஒழுகிவந்தால், தமிழும், அதன் வழியாகத் தமிழ் மக்களும் தமிழ்நாடும் என்றும் தமக்குரிய உணர்ச்சியுடன் நிலைபேறுற்று, வளமாய் வயங்கி யொளிர்தல் முழுதும் திண்ணமாம். தமிழர்கட்கு இவ் வாண்மை சிறக்குமாக!

ஆசிரியர் மணிமொழியார் விடுதலையானார்!

நம் போர்வாள் ஆசிரியர் **காஞ்சி மணிமொழியார்** 13-9-48 திங்கள் பகல் 1 மணிக்கு இரண்டாம் முறை சிறைவாசம் ஒரு வாரத்தை முடித்துவிட்டு உடன்சென்ற நண்பர்களுடன் விடுதலையானார். ஏராளமான மக்கள் மலர் மாலை சூட்டி அனைவரையும் வரவேற்றனர். அங்கிருந்து அனைவரும் பெரியார் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்றனர். பெரியார் அவர்கள் சிறைமீண்ட மணிமொழியார்க்கும் பிற தொண்டர்கட்கும் விருந்தளித்தார்கள்.

வயப்படும் பக்தியினால் பயப்படல் நலமா?

போர்வாள்

18—9—48 சனிக்கிழமை

ஜின்னா மறைந்தார்! வாழ்க ஜின்னா!

" இந்தியாவே! உன்னைக் கண்டதுமே கண்கள் கலங்குகின்றன. ஜனவரி 30ல் அன்பின் திருவுரு—அமைதியின் சின்னம்—காந்தியடிகளைப் பறிகொடுத்தாய். செப்டம்பர் 11ல் ஆற்றல் மன்னன்—அஞ்சாமையின் உருவம் காய்தே அஸ்லம் ஜின்னாவை இழந்துவிட்டாய். விடுதலை பெற்றாய். பெற்ற விடுதலை நிலைப்பதற்குள்ளாக உன்னைத் தட்டி எழுப்பி உற்சாக மூட்டி, உணர்ச்சியின் உருவமாக, எழுச்சியின் சின்னமாக, புரட்சியின் வடிவமாக, உன்னை மாற்றி அமைத்து மறுகோலம் செய்த முதுகிழவர் இருவரை காலக் கள்ளனுக்கு 'காவு' கொடுத்துவிட்டாய். காந்தி—ஜின்னா இருவரை இழந்துவிட்டாய். உன் இரு கண்களென இருந்தவரை இழந்துவிட்டாய், உனக்குப் புதிய பாதையை வகுத்துக் காட்டிய உத்தமர்கள் இருவரை இழந்துவிட்டாய், நீ வாழும் வழி இது என்று சுட்டிக் காட்டிய தியாகத் தந்தையர் இருவரை இழந்துவிட்டாய். இந்தியாவே, உன் நஷ்டம் பெரிது; மிகப் பெரிது. உனக்கு ஏற்பட்டிருக்கும் துயரம் தாங்கமுடியாதது, தீர்க்கமுடியாதது. ஜனவரி 30ல் காந்தியாரைப் பறிகொடுத்து, அத்துயரம் கொஞ்சமும் ஆறுமுன்னர், செப்டம்பர் 11ல் ஜின்னாவையும் பறிகொடுப்பதென்றால் யார் பொறுப்பார் இத்துயரம்? அந்தோ, இது கொடிது! கொடிது! இருதயத்தை ஈட்டிமுனை கொண்டு குத்திக் குடையும் கொடுஞ்செயல் போல்வது! இதற்கு மாற்று ஏது, மருந்து ஏது?"

—ஜனாப் ஜின்னா மறைந்தார் என்பது கேட்டு உலகம் முழுவதுமுள்ள நல்லறிவாளர் உள்ளத்திலிருந்து உருண்டோடி வந்த வாசகங்கள் இவை.

ஆம்! காந்தி—ஜின்னா இருவரையும் ஒரே ஆண்டில் இழப்பதென்பது ஈடுசெய்ய முடியாத நஷ்டம் என்பதை, இணை காட்டமுடியாத இழப்பு என்பதை, தீர்த்துவைக்க முடியாத துயரம் என்பதை, மருந்தேதும் பெற முடியாத மனப் புண் என்பதை, உள்ளத்தை வேதனைக் காடாக்கும் சம்பவம் என்பதை எவர்தான் மறுக்க முடியும்?

காந்தியார் இந்தியாவின் வலதுகரம் போன்றவர் எனில் ஜின்னா அதன் இடது கரம் போல்பவர். காந்தியார் அதன் இருதயம் போன்றவர் எனில் ஜின்னா அதன் 'மூளை' போன்றவர். காந்தியார் இந்தியாவின் கண்களைத் திறந்த கலைஞர் எனில் ஜின்னா, அந்தக் கண்களுக்குப் புத்தொளி கூட்டிய பெருந்தகை ஆவார். விடுதலைக் கீதம் இசைத்த மாவீரர் காந்தி எனில் அந்தக் கீதத்தின் நாதத்தை மக்கள் மன்றத்திற்கு விரைந்திடச் செய்தவர் ஜின்னா. காந்தி—ஓர் அணையாத விளக்கு. ஜின்னா—ஓர் அசையாத ஆலமரம். காந்தி—ஓர் அழியாத இலக்கியம். ஜின்னா—ஓர் குறையாத செல்வம். காந்தி—அமைதியின் வடிவம். ஜின்னா—ஆற்றலின் உருவம். காந்தி—இந்தச் சொல்லுக்குப் பொருள் அன்பு. ஜின்னா—இந்த வார்த்தைக்கு அர்த்தம் வீரம். காந்தி—இதைச் சொன்னதும் பிறப்பது சாந்தம். ஜின்னா—இதை உரைத்ததும் எழுவது தீரம். காந்தியைக் கண்டால் சாக்ரடீசைக் கண்டோம் எனலாம். ஜின்னாவைக் கண்டால் கேமால் பாட்சாவைக் கண்டோம் எனலாம். நாள் ஏற ஏற தன் ஆற்றலைப் பெருக்கிக்கொண்டே வந்த ஓர் அற்புத சக்தி—காந்தி! எதிர்ப்பு வளர வளர தன் பலத்தைக் கூட்டிக்கொண்டே வந்த ஓர் அதிசய சக்தி - ஜின்னா! காந்தி! ஜின்னா! இருவரையும் இழந்துவிட்டது இந்தியா!

காந்தியாருடன் பல முறை போராடி இருக்கிறார் ஜின்னா, ஜின்னாவின் அரசியல் தத்துவங்களை பல முறை வெட்டி எறிந்திட முனைந்திருக்கிறார் காந்தி. ஒரே இந்தியா—இது காந்தியாரின் இலட்சியம். இரண்டு இந்தியா—இது ஜின்னாவின் எண்ணம். இந்தியர் யாவரும் ஓர் இனம்—காந்தியார் கருத்து. இந்துக்களும் இஸ்லாமியரும் தனித்தனி இனத்தவர்—ஜின்னாவின் வாதம். முஸ்லிம் லீக் என்று ஓர் தனி அமைப்பு தேவையில்லை, நாம் எல்லோரும் ஒரு கட்சியிலே இருப்போம்—காந்தி. இல்லை—அது முடியாது! செய்து பார்த்துத் தோற்ற பரிசோதனை அது! நாங்கள் தனியாகத்தான் இருப்போம்—ஜின்னா! உண்மையிலேயே ஜின்னா, காந்தி, இருவர்க்குமிடையே வேற்றுமைகள் ஏராளமாக இருக்கத்தான் செய்தன, ஆனால் தியாகம்—அது இருவரையும் ஒன்று பிணைத்தது. தியாக பூமியில் உலவிடும் உத்தமர்கள் என்ற அளவில் இருவர்க்குமிடையே இம்மியளவு வேற்றுமையும் இருந்ததில்லை, வேறு வேற்றுமைகள் ஆயிரம் இருந்தாலும்.

காய்தே அஸ்லம் ஜின்னா விரும்பியிருந்தால் கோடீஸ்வரராக இருந்திருக்க முடியும்—பாரிஸ்டர்களுக்குள் பெரிய பாரிஸ்டராக உலவி இருக்க முடியும்—இலட்சம் பத்துலட்சம், கோடி, பத்துக்கோடி எனப் பணம் திரட்டி இருக்க முடியும்—ஆனால் அவரோ அவற்றைத் துச்சமென வெறுத்துத் தள்ளினார், பொதுநலத் தொண்டே தன் வாழ்க்கைத் தொண்டு என கூறுனரை புகன்றார், ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக ஓயாது

விரைப் பணிவது மக்களின் கடனா?

சாயாது, அலுத்துவீழாது, களைத்துக் கவிழாது, அறப்பணி ஆற்றி வந்தார், இன்று மறைந்தார், மறைந்தாரா—இல்லை, பத்துக் கோடி இஸ்லாமியரின் உள்ளத்திலே இரண்டறக் கலந்துவிட்டார்.

பாகிஸ்தான் ஒரு பகல் கனவு—ஏழாண்டுகளுக்கு முன்பு! இன்றோ, அது ஒரு அற்புத சித்திரம்! ஏழே ஆண்டுகளில் ஒரு பெரிய, புதிய, தேசத்தை உருவாக்கிய பெருமை—கடல்போன்ற எதிர்ப்புக் கிடையே உருவாக்கிய பெருமை—சுழலும் சூருவளியென மூண்டெழுந்த பகைமைக் கிடையே உருவாக்கிய பெருமை ஜனப் ஜின்னாவைத் தவிர வேறு எவருக்கும் இருப்பதாக உலக வரலாற்றிலேயே ஆதாரம் கிடையாது. வரலாறு கண்டறியாத இப் புதுமையை நடைமுறை கீதமாக உருவாக்கிய ஜின்னா ஓர் அற்புதமான மனிதர்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அடே அப்பா! பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்ற முழக்கத்தை முதன்முதலில் தோழர் ஜின்னா எழுப்பிய போது, எவ்வளவு கிண்டல்! எல்வளவு கேலி! எவ்வளவு வசைமாரி! எத்தனை எத்தனை 'பெரிய தலைகள்' ஜின்னாவை முறைத்துப் பார்த்தன! எவ்வளவு பலம் பொருந்திய சக்திகள் எல்லாம் ஒன்றுதிரண்டு அவரை ஒழித்துக் கட்ட சபதம் புரிந்தன! இந்தியா முழுவதுமிருந்து அந்த இலட்சியத்திற்கு எதிராகக் கிளம்பிய படைகள் கொஞ்சமா! பாகிஸ்தானாவது, கபர்ஸ்தானாவது—வீண் கனவு என்று உரத்த குரலில் உலகம் முழுவதும் அறிய கூக்குரல் இட்டவர்கள் தொகை என்ன சிறிதா? அவர்களுடைய ஆள் பலமும் தோள் பலமும் படை பலமும் பக்க பலமும் என்ன குறைவா? பாகிஸ்தான் கேட்பதே பாவம் என்று முனிபுங்கவர்கள் மூதுரை புகன்றதும், பசுவை வெட்டிடும் பாதகம் அது என குட்டிக்கதைகளை நல்லுகபட்டர்கள் கூறியதும், அவரடிப் பொடியார்கள் ஆம் ஆம் என வேக வேகமாகத் தலையை அசைத்ததும், ஜின்னாவை விரட்டவேண்டும் இந்தியாவை விட்டு என்று, தமக்கு ஏதோ இந்தியாவில் பரம்பரை பரம்பரையாக உரிமை இருப்பது போல எண்ணிக்கொண்டு ஆரியத் தலைவர்கள் ஆர்ப்பாட்ட வடம் பூண்டதும் என்ன வெறுங் கனவா? இவ்வளவு எதிர்ப்புக் கிடையேயும், சரமாரியாகத் தன் மீது பாயவரும் கிண்டல் பாணங்களுக்கு நடுவேயும், பெரும் பெரும் தலைவர்களின் 'ஆகாது—முடியாது—கூடாது' முழக்கங்களுக்கு ஊடேயும் ஜின்னா, பிடிவாதமாக, உறுதியாக, திட்டவட்டமாக, தைரியமாக, அச்சம் தயை தாட்சண்யம் துளியுமின்றி, அழுத்தந் திருத்தமாக; பாகிஸ்தான்—அதற்குக் குறைந்த எதனையும் நான் ஒப்பமாட்டேன் என்று கூறக் கேட்டு 'செ! இவர்க்கென்ன பித்தமோ' என்று கேலி பேசத் தொடங்கிய முஸ்லிம் தலைவர்களே எத்தனை பேர்!

ஆனால், ஜின்னா, கடுவெயிலுக்கும் அடைமழைக்கும் அசையாத மலைபோல, எதிர்ப்பையும் ஏசலையும் கண்டு துளியும் கலங்காது தன் கருமமே கண்ணாக நின்றார், பாகிஸ்தான் பாதையிலேயே நாளும் நாளும் சென்றார், எவர் எதிர்த்தால் என்ன எவர் ஏசினால் என்ன—எனக்கு வேண்டியது பாக்கிஸ்தானே—அதனை நான் அடைந்தே தீருவேன் என்று இடிமுழக்கம் புரிந்தார், ஏழே ஆண்டில் தன் இலட்சிய பூமியைக் கண்டார், களித்தார், வென்றது அவர் இலட்சியம்—எழுந்தது பாகிஸ்தான்—தலைநிமிர்ந்தனர் இஸ்லாமியர்.

தன் வாழ்நாளிலேயே தன் இலட்சியம் சித்தி பெறுவதை நேரில் காணும் வாய்ப்பு இலட்சியவாதிகளில் ஒரு சிலருக்கே கிடைக்கும். அந்தச் சிலரில் ஒருவர் ஜின்னா.

ஜின்னா, தன் இலட்சிய பூமியை, ஏழே ஆண்டுகளில் அடைந்துவிட்டார் எனில் அதற்குக் காரணம் இஸ்லாமியரின் அற்புதமான கட்டுப்பாடு மட்டுமல்ல, அந்தக் கட்டுப்பாட்டினை இயற்கையிலேயே இஸ்லாமியருக்குள் எழுப்பக்கூடிய ஜீவசக்தி படைத்தது இஸ்லாம் மார்க்கம் என்பது மட்டுங்கூட அல்ல, ஜின்னாவின் வெற்றிக்கு இவை பெருந்துணை புரிந்தன என்பது உண்மை, ஆனால் அவர்தம் வெற்றிக்கு மூலகாரணம் அவருடைய பிடிவாதமே, தைரியமே, உறுதியே தானே தவிர வேறில்லை. எந்தத் திசையிலே நிறுத்தினாலும், எந்த நிலையிலே பொருத்தினாலும், எந்தக் கோணத்திலே அமைத்து வைத்தாலும், காந்த ஊசி, வடதிசையிலேயே திரும்பிநிற்பது போல, ஜின்னா, இந்திய அரசியல் வானிலே இந்த ஏழாண்டுகளாக எந்தப் பிரச்சினை தோன்றினாலும், அது எந்தெந்தவடிவத்திலே வந்தாலும், அதனை யார் யார் எழுப்பிவிட்டாலும், அதற்குத் தரப்படும் நிறமும் குணமும் மதிப்பும் மரியாதையும் எத்தகையதாக இருந்தாலும் அதனை பாகிஸ்தான் என்ற ஒரே உரை கல்லைக் கொண்டு தான் அவர் உரைத்துப் பார்த்துவந்தார், "இதென்ன புதிய அரசியல் திட்டமா, இதனால் உரிமைகள் பலப்பல கிடைக்குமா, சரி சரி, உரிமைகள் இருக்கட்டும் ஒரு புறம், அதனைப் பிறகு பார்ப்போம்! இதனால் பாகிஸ்தான் கிடைக்குமா கிடைக்காதா—அதைச் சொல்லு முதலில்" என்றுதான் அவர் கூறிவந்தார். "யாரது மவுண்ட்பேட்டனா, புதிய வைசிராயா! அழகாகப் பேசுகிறாரா, அன்பாக நடக்கிறாரா, புன்னகை பூத்த முகத்துடனே உரையாடல் புரிகிறாரா, இருக்கட்டும் இருக்கட்டும், பாகிஸ்தான் கொடுப்பாரா—கேள் முதலில்" என்றுதான் அவர் சொல்லிவந்தார். ஆச்சாரியாரா தாங்கள்! அற்புதமான மூளைபலம் வாய்ந்தவரா நீங்கள்! நவீன சாணக்கியர் என்று கூட பட்டப் பெயருண்டா! மாம்பலத்து மாக்கியவல்லி என்று கூட சொல்லுவார்களா! மிக மகிழ்ச்சி! ஆனால் பாகிஸ்தான் உமக்கு சம்மதந்தானா—அதைச் சொல்க முதலில், பிற பின் என்றுதான் அவர் பேசிவந்தார். ஆம்! பிற, பின்! அதுதான் ஜனப் ஜின்னா உடனடியாக தன் இலட்சிய வெற்றி பெற்றதற்குரிய அடிப்படைக் காரணம்.

பாக்கிஸ்தானின் தந்தை என்று இஸ்லாமியர் உலகு அவரைப் போற்றிப் புகழ்கிறது—அது புனைந்துரை அல்ல உண்மை என்பதை எவரும் ஒப்புவர்—ஒப்ப

மேவும் உழைப்பினிலே ஏவுதல் கடனா ?

மறுப்பது பிறவிக் குருடர் செயல் தவிர வேறில்லை—பாகிஸ்தானின் நிர்மாண கர்த்தா அவர்தானே—அவருடைய அரிய ஆற்றலுக்கும் அற்புத சக்திக்கும் உள்ள அழியாத நினைவுச் சின்னமல்லவா பாகிஸ்தான்—அந்த டாஜ்மஹால் அவர் எழுப்பிய கட்டிடமல்லவா—அவருடைய உறுதிபடைத்த உள்ளத்தின் உருவெளித் தோற்றம்தானே பாகிஸ்தான்—ஆகவே பாகிஸ்தானின் தந்தை அவர் என்பதை மறுப்பாரில்லை—ஆனால் நாம் கூறவந்தது அதுவல்ல—பாகிஸ்தான் என்ற அளவோடு அவருடைய சாதனை நிற்கவில்லை, அந்தப் புதிய நாட்டினை உருவாக்கியதோடு அவருடைய திறமை நின்றுவிடவில்லை, அவர் ஆற்றிய பணி, இஸ்லாமியரைத் தட்டி எழுப்பியதோடு அடங்கிவிடவில்லை, அவர்தொண்டு, எட்டுக்கோடி இஸ்லாமியர் என்ற எல்லைக் கோட்டளவில் நின்றுவிடவில்லை, மேலும் மேலும் சென்றிருக்கிறது, இந்தியா முழுவதுக்குமே பயன்பட்டிருக்கிறது.

1914-ல்தான் ஜனாப் ஜின்னா முஸ்லிம்லீக் உறுப்பினரானார், ஆனால் அவரது பொதுத் தொண்டு அதற்கு முன்னாலேயே 15 ஆண்டுகளாக இருந்துவந்தது. இங்கிலாந்தில், அவர் பாரிஸ்டர் படிப்புக்காகத் தங்கியிருந்தபோதே, அவரது பொதுவாழ்க்கை தொடங்கிவிட்டது——அப்போதே அவருக்கு தாதாபாய் நௌரோஜி என்ற அந்த முதுபெருங் கிழவருடன் தொடர்பு இருந்து வந்தது. 1902-ல், ஜின்னா, பாரிஸ்டர் படிப்பை முடித்துக்கொண்டு, இந்தியாவுக்குத் திரும்பி, பம்பாயில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்—அதிலே பெரும் புகழ் பெற்றார்—ஆனால் விரைவிலே தேசியத் தீயிலே குதித்தார், இந்திய தேசிய காங்கிரசிலே பெரும் பங்கு கொண்டார்—ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரிலே பிற தேசியத் தலைவருடன் தோளுடன் தோள் இணைந்து நின்று நீண்டநாள் பணியாற்றினார். ‘ஹோம் ரூல்’ இயக்கத்தின்போதும், அதற்கு முன்னரும், காங்கிரஸ் வட்டாரத்தில், தலைவர் குழுவில் இருந்து அவர் ஆற்றிய பெருந் தொண்டினை இன்றைய “தேசிய” இளைஞர்கள் அறியாமல் இருக்கலாம், ஆனால் காங்கிரஸ் கட்சியின் முதிய தலைவர்கள் அவர், முன்னாளில் காங்கிரஸ் பலம் வளர, ஏகாதிபத்தியம் தொலைய, ஆற்றிய பணியினை மறக்க முடியாது.

இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் குலைத்தவர் அவர் என்று அவருடைய மரணச்சேதி மனதைக் குடையும்போதுகூட சிறு சொல் புகன்றுள்ளனரே சில சிறுமதியாளர்கள், அவர்களுக்குக் கூற விழைகிறோம், கோபால கிருஷ்ண கோகலே, ஜின்னாவுக்குக் கொடுத்த பட்டம் **இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கான மிகச் சிறந்த தூதுவர்** என்பது! “ஜனாப் ஜின்னாவையே நான் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கான மிகச் சிறந்த தூதுவர் என்று கருதுகிறேன். ஏனெனில் அவரிடம் தான் பேத உணர்ச்சியும் பிளவு மனப்பான்மையும் அற்ற தோழமை உணர்ச்சியும், இந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கான உண்மை ஆற்றலும் நிறைந்துகிடக்கின்றன.” என்று அறிஞர் கோகலே அந்நாளில் கூறினார்—நினைவிருக்கட்டும், கோகலே ஒரு ஆரியர்! ஆகவே அவர் ஏதோ பாரபட்ச உணர்ச்சியாலே இப்படிக் கூறினார் என்று எவரும் கூறுதற்கில்லை.

1930ல் லண்டனில் கூடிய வட்டமேஜை மாநாட்டின்போதும் அவர் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக பெரும்பாடுபட்டிருக்கிறார். “இந்தப் பாழும் ஜின்னாவுக்கு இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பேசுவதிலும் எழுதுவதிலும் அலைவதிலும் உழைப்பதிலும் அலுப்பே கிடையாதுபோலிருக்கிறதே” என்று சீமைப் பத்திரிகை ஒன்று அந்நாளில் எழுதியிருக்கிறது—அந்த அளவுக்கு அவர் ஒற்றுமைக்காகப் பாடுபட்டிருக்கிறார். அந்த வட்ட மேஜை மாநாட்டின் முடிவிலே இந்து முஸ்லிம் ஒற்றுமை சாத்தியமில்லை என்பதை அறிந்ததும் திடுக்கிட்டார் ஜின்னா—மனம் உடைந்து போய்விட்டார்—இனி இந்தியாவுக்குத் திரும்புவதில்லை, இந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்ட முடியாது எனில் இந்தியாவுக்குத் திரும்பி என்ன பயன்—சீமையிலேயே தங்குவோம், வக்கீல் தொழில் நடத்துவோம், சீமைப் பாராளுமன்ற உறுப்பினராவோம் என்று எண்ணிவிட்டார் ஜின்னா—நான்கு ஆண்டுகள் அங்கேயே தங்கியும் விட்டார், 1935ல் தான் இந்தியாவுக்குத் திரும்பினார்—1937ல் காங்கிரஸ் நாடாளும் பொறுப்பை ஏற்றது—இந்து முஸ்லிம் பிளவை வளர்த்தது—சமாதானத் தூதுவர் ஜின்னா போர்த் தலைவரானார்—அத்தகைய நிலையை தன் நினைப்பாலும் நடவடிக்கையாலும் வளர்த்தது காங்கிரஸ்—லீக் வளர்ந்தது—மேலும் மேலும் வளர்ந்தது—அதிசயிக்கத்தக்க அளவு வளர்ந்தது—பாகிஸ்தான் பிறந்தது. இந்த வரலாற்றை எண்ணிப் பார்க்கும் எவரும் இந்து முஸ்லிம் பிளவு பிறந்ததற்கும் வளர்ந்ததற்கும் மூல-காரணம் காங்கிரஸே தவிர ஜின்னா அல்ல என்பதை அறியாமல் இருக்க முடியாது.

ஜின்னாவின் அரசியல் கொள்கைகள் சரிடா தப்பா என்பதில் பலருக்கும் கருத்து வேற்றுமை இருக்கலாம்; ஆனால் அவருடைய நேர்மை, ஒழுக்கம், கொள்கைப் பற்று, அவர் தனக்குச் சரி என்று தோன்றியதை எவர் தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாது நிலை நாட்டிய திறமை, தீரம் ஆகியவற்றை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஜின்னா என்றால் ஒரு மனிதர் அல்ல, ஒரு கொள்கை ஒரு தத்துவம், ஒரு இலட்சியம். மனிதர்களுக்கு மரணம் உண்டு; ஆனால் சிறந்த கொள்கைகளுக்கு உயர்ந்த தத்துவங்களுக்கு, உன்னத இலட்சியங்களுக்கு என்றும் ‘மரணம்’ கிடையாது. அவை “சாகா வரம்” பெற்றவை. என்றும் ‘சிரஞ்சீவி’யாய் இருப்பவை. மூப்புப் பிணி சாக்காடு அற்றவை. அத்தகைய தத்துவங்களில் ஒன்றுதான் ஜின் எல்லா இனங்களும் ஒத்த உரிமையுடன் வாழவேண்டும் என்பதே “ஜின்னாயிச”த்தின் அடிப்படை.

காரல் மார்க்ஸ் ஒரு தத்துவம்- சாக்ரடீஸ் தத்துவம். ஏசுநாதர் ஒரு தத்துவம். கெமால் பா

நாணும் மூடவழக்கம் நாடுதல் பெரிதா ?

ஒரு தத்துவம். மாவீரர் லெனின் ஒரு தத்துவம். காந்தியடிகள் ஒரு தத்துவம். பெரியார் ஈ. வெ. ரா. ஒரு தத்துவம். ஜனாப் ஜின்னா ஒரு தத்துவம். இந்த தத்துவங்கட்கெல்லாம் தோற்றம் உண்டு, மறைவு இல்லை. பிறப்பு உண்டு, இறப்பு இல்லை. வாழ்வு உண்டு, சாவு இல்லை.

ஜின்னா என்ற மனிதர் மறைந்துவிட்டார். ஆனால் ஜின்னா என்ற தத்துவம்—அது மறையாது, மறைய முடியாது. அதை மறைக்கும் ஆற்றல் உலகத்தில் எந்த "சக்தி"க்குமில்லை.

ஜின்னா மறைந்தார்! வாழ்க "ஜின்னா"!

ஐதராபாத்தில் இந்தியத் துருப்புகள்!

செப்டம்பர் 13 திங்கட்கிழமை காலை 4 மணிக்கு ஐதராபாத்துக்குள் நுழைந்த இந்தியத் துருப்புகள் எதிர்ப்புச் சக்திகளைத் தவிடுபொடியாக்கிய வண்ணம் எதிர்பார்த்ததைவிட வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

'ஐதராபாத்' சிற்றரசு, கண்ணுக்கெட்டிய தூரம் நீர்ப்பரப்பே தவிர வேறு இல்லாத கடலுக்கு நடுவே இருக்கும் தீவு போல, இந்திய சர்க்காரின் நிலப் பகுதிகட்கு நடுவே இருக்கிறது. 'ஐதராபாத்'துக்கு மேற்கே பம்பாய் மாகாணமும், தெற்கேயும் தென்கிழக்கிலேயும் சென்னை மாகாணமும், மேற்கேயும் வடமேற்கேயும் மத்திய மாகாணமும், வடக்கே பீராரும் அமைந்து கிடக்கின்றன. இந்திய சர்க்கார், நான்கு புறங்களில் தங்கள் தாக்குதல்களைத் தொடங்கி உள்ளனர். வடகிழக்குப் புறத்தில் மத்திய மாகாணத்தில் 'சண்டா' என்ற ஊரிலிருந்து ஒரு படையும், வடமேற்குப் புறத்தில், பம்பாய் மாகாணத்தில் சாலிஸ்கவோன்—ஜால்கவோன் பகுதியிலிருந்து ஒரு படையும், தென்கிழக்குப் புறத்தில், திராவிட நாட்டில், பெஜவாடாவிலிருந்து ஒரு படையும் ஐதராபாத்தை ஊடுருவிப் பாய்ந்திருக்கின்றன. இவற்றில், சாலிஸ்கவோன் புறத்திலிருந்து (பம்பாய் மாகாணம்) நுழைந்த படை சில்லோடு, வாக்ரா, ஜல்னா முதலிய ஊர்களைக் கைப்பற்றிக்கொண்டு ஏறத்தாழ 110 மைல் முன்னேறி இருக்கிறது. ஷோலாபூர் வழியாக நுழைந்த படை 64 மைல் முன்னேறி ஹாம்னாபாத் என்ற முக்கிய ஊரைக் கைப்பற்றிக்கொண்டு மேலும் முன்னேறிக் கொண்டிக்கிறது. இந்த 'ஹாம்னாபாத்'திலிருந்து சிகந்தராபாத் 93 கற்கள்தான். திராவிட நாட்டிலிருந்து பெஜவாடா வழியாக நுழைந்த படை லிங்ககிரி, நெலகண்டபள்ளி முதலிய ஊர்களைப் பிடித்துக்கொண்டு, 'சூரியாபேட்டை'யையும் கம்மாபேட்டையையும் வீழ்த்திவிட்டு, மேலும் கொஞ்சம் முன்னேறியிருக்கிறது. இங்கிருந்து சிகந்தராபாத் 84 கற்கள்தான்: எனவே இத் தலையங்கம் எழுதி முடித்து அச்சுக்குப் போவதற்குள்ளாக 'சிகந்தராபாத்' விழுந்து விட்டாலும் வியப்படைவதற்கில்லை.

(2-ம் பக்கம் பார்க்க)

இந்தி எதிர்ப்பாளர் கரத்திலெல்லாம் தவழவேண்டிய நூல்! ★ **தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய புத்தகம்!**

தமிழன் தொடுத்த போர்!

அல்லது

இந்தி எதிர்ப்பு இயக்க வரலாறு

மா. இளஞ்செழியன் B. A. (HONS)

தீட்டியது!

★

"இந்தப் புத்தகம், இதைப் படித்துப் பார்க்கிறவர்களுக்கு, இந்தி எதிர்ப்புப் போரைப்போல் உடனே ஒரு போராட்டம் ஏற்படாதா, நமக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்காதா என்கின்ற ஒரு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் உண்டுபண்ணத்தக்கதாக இருக்கிறது. உண்மையைச் சொல்லவேண்டுமானால், எனக்கே, இப்புத்தகத்தைக் கொஞ்சம் பார்த்த அளவிற்கே இந்தி எதிர்ப்புப் போன்றதான—ஏன்—அதைவிட முக்கியமான காரியங்களுக்கும் போராடவேண்டியது இன்றியமையாததாகக் காணப்படும் இக்காலத்தில் நாம் ஏன் சும்மா இருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது."

—பெரியார்

"இந்த வரலாற்றினை, என் நண்பர் இளஞ்செழியன், உணர்ச்சி ஊட்டக் கூடிய முறையில் இனிமையும் பயனும் உள்ள முறையில் தீட்டியுள்ளார். இந் நூலின் மூலம் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் நண்பர் நற்றொண்டு ஆற்றியுள்ளார். என் பாராட்டுதல். தமிழரின் இல்லந்தோறும் இந் நூல் இருந்து, உள்ளந்தோறும் உணர்ச்சியை ஊட்டி, நாட்டின் மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிதற்கான அறப்போர் புரியும் ஆற்றலைத் தருமாக! தரும்—நிச்சயம்! தமிழகம் தழைக்க இந்த ஏடு பெரிதும் பயன்படும்."

—அண்ணா

★

240 பக்கங்கள்! **குறைந்த விலை!**

விலை ரூ 1 12 0 **தபாலில் ரூ. 2 0 0**

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

நல்லறிவென்னும் வழிச் செல்லுதல் பெரிதா?

விக்னேஸ்வரரே, கேளும்!

வாருமய்யா விக்னேஸ்வரரே, நலம்தானா? சென்ற வார 'போர்வாள்' இதழ் கிடைத்ததா? படித்தீரா? மனம் திருந்தினீரா? செந்தமிழ் மீதுள்ள வெறுப்பைப் போக்கிக் கொண்டீரா? இல்லை—இன்னமும் பழைய போக்கிலேதான் போய்க் கொண்டிருக்கிறீரா?

'சுதந்த்ரா' என்னும் ஆங்கில ஏட்டை நடத்தி அதிலே "விக்னேஸ்வரராக" உலவிடும் ஆரிய எழுத்தாளரே, சென்ற வாரக் கட்டுரை உம் சித்தத்திலே இருக்கும் பித்தத்தைப் போக்கி இருக்குமே, தனித் தமிழ் என்றால் என்னவோ ஏதோ என்று மருண்டு போகிறீரே, அது சுயமரியாதைத் தங்கசாலையில் அச்சடிக்கப்பட்ட கள்ள நாணயம்—அது நாட்டுக்குப் பயன்படாது என்று கூவுகிறீரே, தனித்தமிழா—அது வெறும் மிளகு தண்ணி—உடலுக்கும் நல்லதில்லை—மருத்துவர்களும் அதை ஒப்புவதில்லை என்று எல்லாம் அறிந்தவர்போல் கொக்கரிக்கிறீரே, உமக்குத் தெரியுமோ தெரியாதோ, இந்தக் கூச்சலும் கொக்கரிப்பும் மருட்சியும் மிரட்சியும் ஒரு பயங்கரமான வியாதியின் அடையாளங்கள்—பித்துப் பிடித்த ஆரிய மனப்பான்மை என்பதுதான் அந்த நோய்—அந்த நோய் போகத்தான் சென்ற வாரம் ஒரு "டோஸ்" மருந்து கொடுத்தோம், இதோ மற்றொரு "டோஸ்," பருகும்; பித்தம் முற்றிலும் தீரும்!

சென்ற இதழிலே, தனித்தமிழ் இயக்கம் புசுபுசுத்து விடவில்லை, திடீர் என முளைத்து விரைவிலே கருகி அத்துடன் அழிந்துபோகும் காளானாக அது இருக்கவில்லை, மிக மிக விரைவாகப் பரவி வருகிறது—எழுத்தாளர் உலகிலே அது செங்கோல் ஓச்சத் தொடங்கிவிட்டது—பேச்சாளர் அரங்கிலே அதற்குத் தனிச்சிறப்பு தோன்றிவிட்டது—இதழாசிரியர் கூட்டத்திலேயும் அதற்கு செல்வாக்கு ஏராளம் என்பதையெல்லாம் எடுத்துக்காட்டினோம். இந்த இதழிலே ஏன் தனித்தமிழ் வேண்டும், ஏன் வட சொற்களையும் பிற மொழிச் சொற்களையும் கலவாது இயன்றவரை தூய தமிழிலேயே எழுத வேண்டும் என்பதற்கான கருத்து விளக்கம் தரப்படுகிறது. இது, ஏழாண்டுகளுக்கு முன்னர், செந்தமிழை வெறுக்கும் விக்னேஸ்வரரே, உம் போன்ற 'ஆரிய'ர்க்கல்ல—அவர் தம் அடி பணிந்து தொழுதிடும் எம் இன விபீஷணர்க்கு அறிவு கொளுத்துவதற்காக 'செந்தமிழ்ச் செல்வி' என்ற ஏட்டிலே தீட்டப்பட்ட கட்டுரை—'ஆங்கில மாடு' என்ற பெயருடையது. இது, உமக்கும் பொருந்தும். படியும்—படித்து மனம் திருந்தும்!

ஆங்கில மாடு :

புதுக்கோட்டை அரசில், ஒருகால், ஏதோ தப்புச் செய்ததன் காரணமாக ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் மீண்டும் அவ்வேலையைப் பெறுவதற்கு மிகவும் முயற்சிகள் செய்து விண்ணப்பமும் அனுப்பியிருந்தார். அப்போது அவ்வரசின் ஆட்சியாளராயிருந்தவர், அவ்விண்ணப்பத்தின்மேல் "வறுத்த கொள் முளைக்குமோ!" என்று கட்டளை எழுதி அதனைத் திருப்பி அனுப்பிவிட்டாராம்! உவமானம் செல்லாத இடம் எங்கே இருக்கிறது? உவமானங்களுக்கு இல்லாத செல்வாக்கு உலகத்தில் வேறு எதற்கு இருக்கிறது! அவ்வாட்சியாளர் மற்றவர்களை ஆள, அவர் உள்ளத்தை இலக்கியம் எவ்வளவு சுவையாக ஆளுகின்றது!

சிறிது காலத்துக்குமுன் **திரு. சக்கரவர்த்தி. இராசகோபாலாசாரியாரவர்கள்** சென்னை முதலமைச்சராயிருந்து இலக்கியச் சுவைகளோடு நிகழ்த்திய சட்டசபைப் பேச்சுகளைத் தமிழ்நாடு விரைவில் மறப்பதற்கில்லை: இவர்கள், ஆட்சியிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர்கள் பால் இயற்கையாகவே ததும்பி நிற்கும் இலக்கிய உள்ளம் மட்டும் எப்படியும் நாட்டுக்குப் பயன்பட்டுக்கொண்டேதான் இருக்கிறது. அறிஞர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கங்கே இலக்கியங்களும் எப்போதுங் கூடவே இருக்க விரும்புகின்றன.

திரு இராசகோபாலாச்சாரியார் இப்போது, சில நல்ல கட்டுரைகளும் எழுதிவருகிறார்கள். 'வசனநடை' 'பேச்சுத் தமிழ்' எனவெல்லாம் புதிய முறைகளில் இவர்கள் எழுதியிருப்பது தமிழுக்கு ஒரு வகையில் ஆக்கந் தருவனவாயிருக்கின்றன.

இக்கட்டுரைகளுள் ஒன்றிலேதான் '**ஆங்கில மாடு!**' வருகின்றது. ஆங்கிலத்தைப்பற்றிப் பேச நினைத்த போது அதனை ஒரு மாடாக உருவகஞ் செய்து நம் மனக்கண்முன் நிறுத்தியிருக்கிறார்கள். 'வசன நடை' என்னுங் கட்டுரையில் இது வருகின்றது. கட்டாயமா

கோயிலுக் கொன்று கொடுத்திடல் அறமா?

ப் படித்துக்கொள்ள வேண்டிய பாகமாதலால், அவர்கள் எழுத்தை அப்படியே எடுத்து இங்கே காட்டுவது நல்லது. அது பின்வருமாறு :—

" தமிழில் பேச்சு கெட்டுப்போயிருப்பது மூன்று விதத்தில். ஒன்று கொச்சைப் பதங்களுக்கு அளவுக்கு மிஞ்சி இடம் கொடுத்து வருவது. இரண்டாவது, ஆங்கில மொழிகளைத் தயக்கமின்றி எல்லாக் காரியங்களுக்கும் எல்லாசமயங்களிலும் கலந்து பேசும் வழக்கம். மூன்றாவது, பேசும்பொழுது கையையும் தலையையும் ஆட்டி, பேச்சுக்குப் பதிலாக உடலை உபயோகித்து சம்பாஷணை நடத்தும் வழக்கம்.

இவை மூன்றும் பேச்சை அவலக்ஷணமாகச் செய்வதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் அது நம்முடைய இலக்கிய வளர்ச்சியைத் தடுத்து வரும் ரகசியத்தை அனைவரும் காணமாட்டார்கள். **இரண்டாவதாகச் சொன்ன காரணம் மிகவும் முக்கியமான விஷயம்.** பல வேறு விஷயங்களை அறிந்தும் ஆராய்ந்தும் வரும் தமிழர் தாங்கள் சாதாரணமாகப் பேசும்போது முழுதும் தமிழ் மொழிகளாகவே பேசினால் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும். விஷயங்களைப் பேசும்போது தமிழ் மொழி தெரியாத இடத்திலும், மறந்துபோன இடத்திலும், புதுத் துறைகளில் ஆராய்ச்சி செய்யும்போதும், வாதப் பிரதிவாதம் செய்யும்போதும், அறிவையும் நினைவையும் செலவழித்துத் தமிழ் மொழிகளைத் தேடி உபயோகிப்பதற்குப் பதில், எளிதில் கிடைக்கக்கூடிய ஆங்கில மொழிகளை, அதாவது பிறதேசத்தார் கஷ்டப்பட்டுத் தங்களுக்கென்று உண்டாக்கியிருக்கும் மொழிகளை எவ்விதக் கூச்சமுமின்றி இடையிடையே கலந்து பேச்சு நடத்திவிட்டு, தமிழுக்குச் சோறு போடாமல் கொல்கிறோம். சோம்பேறிகளைப் பெற்ற தாயைப்போல் தமிழ் அவதிப்பட்டு வருகிறது. அன்னம் ஊட்டாத தேகம் எப்படி வளரும்? நுட்பமான பொருள் பேதங்களும் அவைகளுக்குத் தகுந்த மொழிகளும் நடையும் ஒரு பாஷையில் எவ்வாறு தோன்றும்? தோன்றியவை எவ்வாறு உயிருடன் நிற்கும்? பொருளைப் புகுத்திப் பேசிப் பழகி வந்தால் தானே பாஷை வளம் பெறும். கிடைத்த புல்லையும் தவிட்டையும் **ஆங்கில நாட்டுக்கே** போட்டுவந்தால் நம்முடைய பசு எவ்வாறு பால் கொடுக்கும்? கொஞ்சம் தடை தோன்றிய இடங்களிலெல்லாம் ஆங்கிலத்தைப் போட்டு நிரவிப் பேச்சை ஓட்டிக்கொண்டு போனால் தமிழ் எங்ஙனம் வளரும்? அறிஞர்களெல்லாம் தமிழைக் கொல்லுவதற்காகச் சதியாலோசனை செய்தாலும் இதைவிட வேறு யுக்தி கண்டு பிடிக்க முடியாது.

இக் காலத்தில் தமிழ் பேசுகிறவர்கள் பேசும் நடைக்கு உதாரணம் பாருங்கள் :—தன்னைத் தான் அறியவேண்டும். அவ்வப்போது Introspection செய்வது நல்லது. ஆனால் morbid ஆகப் போகக் கூடாது. பிடிவாதமாகத்தான் ஒரு கட்சியில் வேலை செய்யவேண்டும். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் செட்டியார் வர வர ரொம்ப narrow minded ஆகப் போய்விட்டார் அல்லவா? அதுதான் என்னுடைய objection. ராதா கிருஷ்ணன் ரொம்ப கெட்டிக்காரன்; யோக்கியன். ஆனால் steadiness போதாது. அவன் failureக்கு அதுதான் explanation. காதல் மணம் எல்லாம் ரொம்ப சரிதான். ஆனால் நம்ம தேசாசாரத்தில் loveக்கு எங்கே இடம்? sex-feeling எல்லாம் love ஆய்விடுமா? Indian Art ஐப் பற்றித் தமிழில் எழுதுவதைவிட இங்கிலீஷில் எழுதுவது எனக்கு சுலபமாகத் தோன்றுகிறது; இதற்குக் காரணம் என்ன? சீதம்மாள் நன்றாகத்தான் பேசுகிறாள். ஆனால் ஒவ்வொரு சமயம் ரொம்ப boaring ஆகப் போய்விடுகிறாள் மனித வாழ்க்கைத் தருமங்கள் எல்லாம் imitation பேரில்தான் உண்டானது என்று psychologists சொல்லுகிறார்களே, உங்கள் opinion என்ன? ஜெர்மனிக்காரன் பமன், propaganda விலேயே பாதி யுத்தம் முடித்துவிடுகிறான். உங்களுடைய மகள் health இப்போ எப்படி? ஒரு வாரமாகக் கொஞ்சம் set-back ஆயிற்று. ஆனாலும் பரவாயில்லை. டாக்டர் hopeful ஆகத்தான் சொல்லுகிறார்.

தமிழ் நாட்டில் படித்த மேதாவிகளும் அனுபவம் கண்ட பெரியோர்களும் தங்களுடைய சாதாரண சம்பாஷணைகளில் ஆங்கிலம் கலக்காமலும் அங்க சேஷ்டைகள் இல்லாமலும் இரண்டு ஆண்டு தவம் இருந்தார்களானால் — அத்துடன் வயல்களிலும், கடைத்தெருவிலும், ஏழைகள் வீட்டிலும், பாமர மக்கள் பேசும் பேச்சில் நன்றாகக்கலந்துகொள்ளக் கற்றார்களானால், தமிழ் வசன நடை தானாக வளம் பெறும். வசனம் பேச்சா எழுத்தா என்ற கேள்வியே கிளம்பாது."
—ஆனந்த விகடன் (9-6-40).

இந்தப் பகுதியின் முதலில் ஒரு மொழியின் பேச்சு நடை மூன்று வகையான காரணங்களாற் கெட்டுப் போகின்றது என்று காட்டியிருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று, பிறமொழிச் சொற்களைத் தடையின்றிக் கலந்து பேசுவது என்றும் கருதுகிறார்கள்.

பேச்சுக் கெட்டுப்போவதற்குரிய மூன்று வகையான காரணங்களுள் இரண்டாவதாகச் சொன்ன பிறமொழிக் கலப்பு என்னும் காரணந்தான் மிகவும் முதன்மையானது என்றும், அக் கலப்பு ஒரு பெரிய மொழிக் கொலையேயாகும் என்றும், அறிஞர்களெல்லாம் ஒன்றுகூடிச் சூழ்ச்சி செய்தாலும் இதைவிடக் கொடுமையான கொலைச் சூழ்ச்சி வேறு கண்டுபிடிக்க முடியாது என்றும் மிகவும் அழுத்தந் திருத்தமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

'பிறமொழிக் கலப்பினால் ஒரு மொழி எப்படி கெட்டுப்போகின்றது? கலவாமையால் ஒரு மொழி எப்படி ஆக்கம் பெறுகின்றது?' என்பவைபற்றி விளக்கிச் சொல்லும்போது, அவர்கள் பல நுணுக்கங்களை எடுத்துப் பொருத்தமாய் விளக்கியிருக்கிறார்கள். அவையாவன :

1. அயல்மொழிச் சொற்களைக் கலந்து பேசும் வழக்கம், தமிழ் மொழியின் அழகைக் கெடுக்கின்றது.

கோடி கொடுக்கும் கல்வி தேடிடல் அறமா ?

2. பல்வேறு கருத்துகளுக்கும், முழுதும் தமிழ் மொழிகளையே பயன்படுத்திப் பேசினால், தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும்.

3. போதிய பழக்கமில்லாத காரணத்தினால் தமிழ்ச்சொல் தெரியாத இடத்திலும்; தெரிந்தும் அடிக்கடி வழங்கிவராத குறையினால் மறந்துபோன இடத்திலும், புதிய துறைகளில் ஆராய்ச்சி செய்யும் போது அங்கே தோன்றும் புதிய கருத்துகளுக்கு ஏற்ற சொற்கள் தமிழிற் கிடைக்காத இடத்திலும், உணர்ச்சிப்போக்கில் தடை விடையாகச் சொற்போர் தொடுத்துப் பேசுமிடத்திலும், எளிதென்று கருதிப் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசிவிடக் கூடாது. அறிவையும் நினைவையும் செலவழித்துத் தமிழ் மொழிகளையே தேடிப் பயன்படுத்த வேண்டும்.

4. அயல் நாட்டவர் தம் அறிவையும் நினைவையும் செலவழித்துத் தங்கள் மொழிக்கென்று வருந்தித் தேடி உருவாக்கி வைத்திருக்கும் சொற்களை நாம் சற்றுங் கூச்சமில்லாமல் எடுத்து நம் மொழியிற் கலந்து கொள்வது நன்றன்று. அப்படிக் கலந்துகொள்வது ஒரு சோம்பேறித்தனமுமாகும்.

5. புதிய நினைவுகளுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை உண்டுபண்ணித் தமிழ் மொழியிற் சேர்க்காவிட்டால், அது, தமிழ் மொழிக்குச்சோறுபோடாமற் கொல்வதற்கு ஒப்பாகும்.

6. எவ்வகைப்பட்ட பொருள் நுணுக்கங்களையும் உணர்த்தும்படி தமிழ்ச் சொற்களுக்கு வழக்குகளை உண்டுபண்ணுவதே தமிழ் மொழிக்குச் சோறுபோடுவது என்பது.

7. அப்படிச் செய்தால், நுட்பமான பொருள் வேறுபாடுகளும், அவற்றைத் திட்டமாகப் புலப்படுத்தக் கூடிய தகுந்த தமிழ்ச் சொற்களும், அச் சொற்கள் கொண்டு இயலுகின்ற செழித்த நடையும் தமிழ் மொழியில் உண்டாகும். காலந்தோறும் அப்படிச் செய்துவராவிட்டால், மொழிக்கு வளம் என்று சொல்லக்கூடிய இந் நிலைமைகளெல்லாம் உண்டாகாமற் போகும். அப்படிச் செய்துவந்தால், மொழி என்றும் உயிரோடு இருக்கும்.

8. சொற்களிற் கருத்துகளைப் புகுத்தி, அச் சொற்களைச் சொன்னவுடன் அவை அக் கருத்துகளை உடனே புலப்படுத்துகின்ற உயிர்த்தன்மைகொள்ளும்படி, ஒரே உறுதியாயிருந்து பேசிப் பேசி வழக்குக்குக் கொண்டுவந்தால்மட்டுமே, மொழி வளம்பெறும்.

9. கருத்துகளும் உணர்ச்சிகளுமாகிய புல்லையும் தவிட்டையும் ஆங்கிலம் முதலிய அயல்மொழி மாடுகளுக்கே போட்டுவிட்டால், நமது தமிழ் மொழியாகிய மாடு என்ன ஆவது? நமக்கு எப்படி அது பயன் தரும்?

10. சிறிது தடை தோன்றுங் காலங்களிலெல்லாம் உடனே பிறமொழிச் சொற்களை எடுத்து ஆண்டு கொள்ளும் வழக்கமே, இங்ஙனம் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தடையாயிருக்கின்றது.

என்று இக் கருத்துக்களையெல்லாம் நுட்பமாகக் காட்டிப், பின்பு, 'அறிஞர்களெல்லாரும் ஒன்று கூடித் தமிழைக் கொல்லுவதற்குச் சூழ்ச்சி செய்த லும், பிறமொழிச் சொற்களைக் கலந்துகொள்ளுத என்பதைவிட வேறு சிறந்த கொலைச் சூழ்ச்சியை கண்டுபிடிக்க முடியாது' இதுதான் சிறந்த கொலை சூழ்ச்சியாவது' என்று அழுத்தமாக வற்புறுத்தி வருத்தந் தோன்றக் கூறியிருக்கிறார்கள்.

அதன்பின்னும் கடைசியாகப், படித்த அறிஞ களும் பழக்கங் கண்ட பெரியோர்களும் பிறமொழி கலப்பிற் காத்தாயில்லாமையினாலேயே தமிழ்மொ கெட்டுப் போகின்றது என்று குறிப்பாகப் புல படுத்தி, இனியேனும் பிறமொழிச் சொற்களை இங்ங மெல்லாம் தமிழிற் கலக்காமலிருக்கவேண்டும் என் அறிஞர்கள் இரண்டாண்டுகள் தவமிருந்தும், அ னோடு பொது மக்களுடைய தமிழ்ச் சொற்களை கலந்துகொண்டும் பழகிவருவார்களானால் தமிழ் நடை தானகவே வளம்பெறும் என்று ஒரு வழியையும் அ வுறுத்தியிருக்கிறார்கள். மேலும், பேச்சு வேறு எழுத்துவேறு அல்ல; இரண்டுக்கும் ஒரே முயற் தான் என்று முடிந்த முடிபாக ஓர் ஐயத்தையும் இவ கள் தீர்த்துவைத்திருக்கிறார்கள்.

ஆ! இக் கருத்துகளெல்லாம் எவ்வளவு அருமையு பெருமையும் உண்மையும் வாய்ந்தனவாயிருக்கின் றன!

இனி, இவர்கள் கட்டுரையைப் படிக்கும்போ யாருக்கும் இயல்பாகத் தோன்றக்கூடிய நினை ஒன்றையும் இங்கே குறிப்பிடவேண்டுவது கட்டாயம யிருக்கிறது.

ஆங்கில மொழிச் சொற்களைக் கலக்கக்கூடா என்று இவர்கள் எழுதிவந்த இடங்களிலெல்லா ஆரியம் ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களை கலக்கலாகாது என்று குறிப்பிட்டுவந்திருந்தால், அ ஙனம் ஒரு நினைவு எழுவதற்கே இடமில்லாமற்பே யிருக்கும். அல்லது, இவர்கள் கட்டுரையில் வ மொழிச் சொற்களைக் கலவாமல் எழுதியிருந்தாலு அந் நினைவு எழுவதற்கு இடமிராது. "இக் கால தில் தமிழ் பேசுகிறவர்கள் பேசும் நடைக்கு உதா ணம் பாருங்கள்" என்று எடுத்துக்கொண்டு, அதன் கீழ் இவர்கள் காட்டும் எடுத்துக்காட்டுரையிலாவத வடமொழிச் சொற்களைப் பிரித்துக் காட்டவில்லை ஆங்கில மொழிச் சொற்களைமட்டும், நீக்குதற்குரியவ என்னும் முறையிற் பிரித்துக் காட்டுகிறார்கள்.

இருக்கட்டும்; ஒரு மொழியின் கலப்புத் தவறு என்று காட்டும்போது, பிறமொழிகளின் கலப்பு தவறு என்பது, தானே பெறப்படுமன்றோ?

கிடைத்த புல்லையும் தவிட்டையும் ஆங்கில மாட்டு குத்தான் போடக்கூடாது; ஆரியம் முதலிய பி மொழி மாடுகளுக்குப் போட்டு நம் தமிழ்மொழிய கிய ஆன் மாட்டைப் பட்டினியிற் கிடக்கவிட்டு கொன்றுவிடலாம் என்று யார்தான் சொல் வார்கள்?

இனி, 'ஆங்கிலம் ஆரியம் என்னும் அயல்மொழி ளின் சொற் கலப்பினால், தமிழ் மொழிக்கு ஐயகோ

(5-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon